# மர்மக் கொலைகள்!



காவல்காரன்பட்டி, சமத்துவபுரம் அருகே இரண்டு மாதங்களுக்கு முன்பு ஒரு இளம் பெண் கற்பழிக்கப்பட்டு அலங்கோலமான நிலையில் கொலை செய்யப்பட்டு கிடந்தார். இந்த சம்பவத்திலும் கொலையான பெண்மணியைப் பற்றிய விவரங்கள் தெரியாமலும், அவரைக் கொலை செய்த நபர் யார் என்பதைக் கண்டுபிடிக்க முடியாமலும் முகம் வெளிறிப் போய் நிற்கிறது காவல்துறை.

இந்த நிலையில் வையம்பட்டியை அடுத்த பாலப்பட்டி என்கிற இடத்தில் இரு தினங்களுக்கு முன்பு ஒரு பகீர் சம்பவம். மாருதி ஆம்னி வேன் ஒன்றில் டிரைவர் சீட்டில் எரிந்த நிலையில் ஒரு ஆண் பிணமாகிக் கிடந்தார். பிறகு அவர் திருச்சி காஜாதோப்பைச் சேர்ந்த தோல் வியாபாரி நஹிம் அகமது என அடையாளம் கண்டுபிடிக்கப்பட்டது. அவரது கார் விபத்துக்குள்ளாகி காஸ் சிலிண்டர் வெடித்து எரிந்து அவர் இறந்திருக்கலாம் என்று போலீஸ் சந்தேகிக்கிறது. ஆனால், அவர் தொழில் போட்டி காரணமாக கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்கின்றனர் அவரது உறவினர்கள். தடய அறிவியல் பரிசோதனைக்குப் பிறகு இந்தச் சம்பவம் கொலையா? இல்லையா? என த் தெரிய வரும். இது கொலை எனத் தெரிய வரும் பட்சத்தில் கொலையாளிகளை அடையாளம் காண வேண்டிய பெரிய சுமை போலிஸுக்கு ஏற்படும்.

"மணப்பாறையில் வாரந்தோறும் நடக்கும் மாட்டுச் சந்தை அதன் சுற்று வட்டார மாவட்டங்களில் மிகப் பிரசித்தி பெற்றது. அந்த மாட்டுச் சந்தைக்கு விற்கவும் வாங்கவும் நிறைய வெளியூர் வர்த்தகர்கள் வந்து செல்வது வழக்கம். அன்றைய தினம் வியாபாரிகளிடம் பணப் புழக்கம் அதிகமாக இருக்கும். மாட்டுத் தரகர்களின் கையிலும் தாராளமாக பணம் புரளும். விலை மாதர்களின் வருகையும் அங்கே அதிகமாக இருக்கும். வெளியூர்களில் இருந்தெல்லாம் விலை மாதர்கள் வந்து பணம் பார்த்து விட்டுப் போவது உண்டு. மர்மமான முறையில் இறந்து போன பெண்கள் பற்றி இந்தக் கோணத்தில் விசாரித்து வருகிறோம். பணத் தகராறு அல்லது சரிவர ஒத்துழைக்காமை போன்ற காரணங்களுக்காக கொலை நடந்திருக்கலாம். அல்லது சைக்கோ நபர்கள் யாரேனும் கொலை செய்திருக்கலாம். கொலையானவர்களைப் பற்றிய விபரம் தெரிந்தால் கொலையாளிகளைப் பற்றியும், கொலைக்கான காரணம் பற்றியும் தெரிய வரும்" என்கிறார் நம்மிடம் பெயர் கூற விரும்பாத ஒரு போலீஸ் அதிகாரி.

இந்த சூழ்நிலையில், மணப்பாறை துணை காவல்



காருக்குள் பிணமாக...

சரகத்தில் இனி மர்மக் கொலை சம்பவங்களோ, பெரிய அளவிலான க்ரைம் நிகழ்ச்சிகளோ நடக்காமலிருக்க அந்தப் பகுதி டி.எஸ்.பி. ஒருவர் ஏற்பாட்டின்படி வீரப்பூர் கோவிலில்சிலநாட்களுக்கு முன்பு கிடா வெட்டி பலி கொடுத்து சிறப்பு யாகம் ஒன்றையும்நடத்தியுள்ளது காவல்துறை. ஆனால் என்ன செய்ய? இந்த யாகத்திற்குப் பிறகுதான் பாலப்பட்டியில் வேனில் எரிந்த நிலையில் ஒருவர் பிணமாகியுள்ளார். ■